**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 11** **நாள் 11.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக நடைபெற்ற புகையில்லா போகி சிறப்பு விழிப்புணர்வு முகாமில் சுற்றுச்சூழல் செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்ட 30 பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்களுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல கண்காணிப்பு குழுத் தலைவர் நீதியரசர் பி.ஜோதிமணி அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக தூய்மை இந்தியா திட்டம் மற்றும் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் சிறப்பு நிகழ்வாக, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வேப்பேரியில் உள்ள பென்டிக் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10.01.2019 அன்று நடைபெற்ற “தூய்மை இந்தியா திட்டம் மற்றும் புகையில்லா போகி” தொடர்பான விழிப்புணர்வு முகாமை தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல கண்காணிப்பு குழுத் தலைவர் நீதியரசர் பி.ஜோதிமணி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்கள். இந்த விழிப்புணர்வு முகாமில், 500 மாணவியர்களும் 40 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இம்முகாமில், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல கண்காணிப்பு குழுத் தலைவர் நீதியரசர் அவர்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் நோக்கங்கள், குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என்று வகைப்பிரித்து அளித்தலின் முக்கியத்துவம், போகிப் பண்டிகையின் போது டயர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள், அதனை தவிர்க்க வேண்டிய அவசியம் முதலியன குறித்து விரிவாக எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், எக்ஸ்நோரா NGO சார்பில், சுற்றுச்சூழல் செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்ட 30 பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாணவியர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. பின்னர் அனைவரும் புகையில்லா போகி மற்றும் பிளாஸ்டிக் தடுப்பு உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், எக்ஸ்நோரா அமைப்பின் தலைவர் கோவிந்தராஜ், பசுமைப்படை ஜி. தங்கராஜ், தலைமையாசிரியர் திருமதி மரியன் உஷா ராணி மற்றும் லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**